**Starting time 12.21 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 253/2008**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 16.06.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : அலமேலு | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u> 1-ம் வாதி மீனாட்சி என்னுடன் பிறந்த மூத்த சகோரரி என்றால், ஆமாம். 3-ம் வாதி என்னுடைய கணவர் என்றால், ஆமாம். தற்போது நாங்கள் குடியிருக்கும் வீடு சம்பந்தமாகத்தான் இந்த வழக்கு தாக்கல் சொய்துள்ளோம் என்றால், ஆமாம். ஆறகளூர் கிராத்தில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால், ஆமாம். ஆறகளூர் கிராமத்தின் இறுதியில் தேரோடும் வீதி தென்வடலாக அமைந்துள்ளது என்றால், ஆமாம். ஊரின் மத்தியில் ராஜவீதி கிழமேலாக செல்கிறது என்றால், ஆமாம். ராஜவீதியில் வடபுறமாக எனது வீடு உள்ளது என்றால், ராஜவீதியில் சோழிஸ்வரர் கோவில் வீதியில், மேல்நிலைப்பள்ளி செல்லும் வீதியில் பூசாரி வீட்டு சந்தில் 4 வது வீடுதான் என்னுடைய வீடு என்றால், ஆமாம். எங்கள் வீட்டின் கிழக்கில் நாகப்பிள்ளையின் வீடு என்றால், இல்லை. எனது வீட்டிற்கு மேற்கில் தங்கவேல் பூசாரியின் வீடு என்றால், இல்லை, பழனியம்மாள் வீடு உள்ளது. எனது வீட்டிற்கு பின்புறத்தில் பொன்னுசாமியின் தோட்டம் உள்ளது என்றால், தெரியாது.

2. கருப்பாயியம்மாள் மீனாட்சி அம்மளுக்கு எழுதி வைத்த பத்திரத்தின் அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால், ஆமாம். கருப்பாயியம்மாள் மீனாட்சி அம்மாளுக்கு எழுதி வைத்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றால், ஆமாம். மேற்படி பத்திரத்தின் அடிப்படையில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், இல்லை. எனது பாட்டி கருப்பாயியம்மாள் பெயரிலுள்ள சொத்திற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. மீனாட்சி அம்மாள் பெயரில் எழுதிக் கொடுத்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால், சரியல்ல. ராஜவீதிக்கு தாவா சொத்து வடக்கில் இருக்கிறதா, தெற்கில் இருக்கிறதா என்றால், தெற்கில்தான் இருக்கிறது. 1917-ல் அருணசல நாயக்கர் எனது பாட்டி கருப்பாயியம்மாள் பெயருக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், ஆமாம். கருப்பாயியம்மாள் பெற்ற சொத்து வீடாக இருந்ததா காலியிடமாக இருந்ததா என்றால், வீடாகத்தான் இருந்தது. கருப்பாயியம்மாள் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட தான பத்திரம் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். அதில் குறிப்பிட்டுள்ள செக்குபந்தி சரியானது என்றால், ஆமாம்.

4. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்து ராஜவீதிக்கு வடக்கில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், வடக்கில் இல்லை. அந்த ராஜவீதியில் வடக்கிலும் தெற்கிலும் 50 வீடுகள் ஒவ்வொருபுறத்திலும் வரிசையாக உள்ளது என்றால், ஆமாம். ராஜவீதியின் மேற்கில் சோழிஸ்வரன் கோயிலில் முடிகிறது என்றால், ஆமாம். சோழிஸ்வரர் கோயில் ராஜ காலத்தில் 600, 700 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால், ஆமாம். ராஜவீதியின் முடிவில் தென்வடலாக மேலவீதி செல்கிறது என்றால், ஆமாம். அதை சோழிஸ்வரன் கோயில் தெரு என்றும் குறிப்பிடுவார்கள் என்றால், ஆமாம்.

5. என்னுடைய வழக்குரையிலும், சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் ஆறகளூர் கிராமத்தில் பிரதிவாதிகளுக்கு சொத்து இருக்கிறதாகக் கூறியுள்ளேன் என்றால், இல்லை, அவர்களுக்கு அங்கு சொத்து இல்லை. பிரதிவாதிகளின் தாயார் அழகம்மாளை எனக்குத் தெரியுமா என்றால், எனக்குத் தெரியாது. ஆறகளூரில் சுமார் 70 வருடமாக அழகம்மாள் பெயரில் ஒரு வீடு இருந்து பிரதிவாதிகளும் அதில் குடியிருந்தார்கள் என்றால், சரியல்ல, நாங்கள்தான் அங்கு குடியிருந்தோம். பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டின் நத்தம் மனைவரி தோராயப் பட்டா 556 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால், சரியல்ல, பத்திரம் எங்களுடைய பெயரில்தான் உள்ளது, UDR பட்டா மட்டும் அவர்களுடைய பெயரில் உள்ளது.

6. UDR பட்டா என்பது விவசாய நிலத்திற்கு மட்டும் கொடுக்கப்படும் பட்டா என்றால், சரியல்ல, வீட்டிற்குத்தான் வாங்கிவிட்டார்கள். நாங்கள் அனுபவித்து வரும் வீட்டிற்கான நத்தம் பட்டாவை ஒப்படைக்கவில்லை என்றால், ஒப்படைத்துள்ளேன். பிரதிவாதிக்குளுக்கு வட்டாட்சியர் வழங்கிய பட்டாவை ரத்து செய்ய கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால், ஆமாம். பலமுறை எனக்கு அழைப்பாணை அனுப்பியும் நான் செல்லாததால் ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டது என்றால், ஆமாம். அதனை எதிர்த்து சேலம் DRO-விடம் மேல் முறையீடு செய்தேன் என்றால், ஆமாம். DRO விசாரணையின் போது இந்த அசல் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், வழக்கில் தீர்த்துக் கொள்ளுமாறு கூறி மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அதே உத்தரவில் RDO போட்ட ஒருதலைபட்ச உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், ஆமாம். பிரதிவாதிகள் பெயரிலுள்ள மனைவரி தோராயப் பட்டாவின் பேரில் எந்த உத்தரவு போடப்படவில்லை என்றால், ஆமாம்.

7. பிரதிவாதிகளுக்கு மேலவீதியில் வீடு உள்ளது என்றால், இல்லை. 2-ம் பிரதிவாதி முத்துசாமியின் அண்ணன் சின்னசாமி என்றால், ஆமாம். அவர்களுடைய பூர்வீக சொத்தை அவர்கள் இருவரும் சரிபாதியாக பிரித்துக் கொண்டார்கள் என்றால், ஆமாம்.

சின்னசாமி அவருடைய பாகத்தை முத்துசாமிக்கே விற்றுவிட்டார் என்றால், ஆமாம். அந்த இடத்தில் முத்துசாமி வீடு கட்டி குடியிருந்தார் என்றால், எங்களுக்கு சொந்தமாக இருந்து கூரை வீட்டை இடித்துவிட்டு முத்துசாமி மெத்தைவீடு கட்டினார் நான் பத்திரத்தை எடுத்துக் கொண்டுபோய் அவரிடம் கேட்டேன், மெத்தை வீடு எங்களுடையதுதான்.

8. தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் நான்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், அதைப் பற்றி தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2-ல் புல எண் மற்றும் பட்டா எண் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல, இருக்கிறது. 07.07.2008 தேதியில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக நான் கூறியிருப்பது பொய் என்றால், சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தில் நான் குறிப்பிட்டுள்ள புல எண் மற்றும் பட்டா எண் தவறானது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் 2-ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கு என்றும், ராஜவீதிக்கும் மேற்கு என்றும், செல்வராஜ் வீட்டிற்கும் கிழக்கு என்றும், முனுசாமி வீட்டிற்கும் வடக்கு என்றும் செக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

9. 1917 மூலப்பத்திரத்தில் கருப்பன் வீட்டிற்கும் வடக்கு, முன்காயர் முத்துபூசாரி வீட்டிற்கு கிழக்கு, பழனியம்மாள் வீட்டிற்கு தெற்கு, கருப்பன் வீட்டிற்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தென்வடல் 10-1/2 கெஜம், கிழமேல் 12-1/2 கெஜம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தாவா சொத்து விவரத்தில் முன்று வகையான சொத்து விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதால் தாவாவே ஏற்கத்தக்கதல்ல என்றால், சரில்ல. தவறான சொத்து விவரத்தை அளித்து அதன் பேரில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல. தாவா வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் ஒன்றுக்கொன்று முரணான சொத்து விவரத்தை கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல.

10. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பட்டாவின்படியும், கிரயப் பத்திரத்தின்படியும்,

50 வருடங்களாக செலுத்தி வந்த வீட்டுவரி ரசீதுகளின் அடிப்படையிலும் பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் உரிமையாளர்கள் என்றாலும், பொய்யான சங்கதிகளைக் கூறி பிரதிவாதிகளுக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.05 P.M.

(ஒப்பம்/- என்.திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஆத்தூர்.